ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2403/23 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25
*2403/23 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***பாராளுமன்றத் தேர்தல் - 2024***

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ ஆம் பிரிவு***

*பிரதேசத்தில் நிலவுகின்ற நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள்*

*பிரதேசத்தில் நிலவுகின்ற நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளரொருவர் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கையொன்றை முன்வைக்கலாம். 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ ஆம் பிரிவின் கீழ் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*02. இதற்குத் தேவையான விண்ணப்பப்பத்திரங்களை அனைத்து மாவட்டங்களின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/ மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் போன்றே, பிரதேச செயலாளர்களின் மற்றும் கிராம அலுவலர்களின் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். சட்டத்திற்கிணங்க பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து அதாவது, 2024.09.24 ஆந் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் குறித்த விண்ணப்பப்பத்திரங்களை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*03. விண்ணப்பதாரி வதிகின்ற பிரிவின் கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரி அவரது தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுவது கட்டாயமாகும். கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

04. விண்ணப்பதாரிகளினால் 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு அதிலுள்ள தகவல்களை விண்ணப்பப்பத்திரத்தில் வழங்க வேண்டுமென்பதோடு, அந்த தேருநர் இடாப்புக்களை அனைத்து மாவட்டச் செயலகங்களில்/ கச்சேரிகளில், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.lk இணையத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம்.ஏ.பீ.சீ.பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024 செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி.

EOG 09-190